கோட்டை தொகுதி மக்களின் சார்பாக வணக்கத்தையும்' நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். பாளையங்கோட்டை தொகுதியில் எல்லா வசதிகள் இருந்தும், தொழில்கள் எதுவும் இல்லாத நகரமாக விளங்குகிறது. எனவே பாளையங் கோட்டை தொகுதி, மேலப்பாளையத்தில் ஒரு நூற்பு ஆலை அமைக்க கருணை உள்ளம் கொண்ட நமது அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் பேட்டையில், தென்னிந்திய கூட்டுறவு நூற்பு ஆலை 50 ஆயிரம் கதிர்களுடனும், பாரதி கூட்டுறவு நூற்பு ஆலை 12 ஆயிரம் கதிர்களுடனும் செயல்பட்டு வருகின்றன. இவைகளைத் தவிர தமிழகத்தில் 17 நூற்பு ஆலைகள் இருக்கின்றன. ஒட்டு மொத்தமாக இவைகள 13.52 இலட்சம் கிலோ கிராம் சிட்டா நூலையும், 11.52 இலட்சம் கி.கிராம் கோன் நூலையும்உற்பத்தி செய்கிறது. தற்போது தமிழகத்தில் நூல் உற்பத்தியில் உபரியாக இருக்கிற காரணத்தால்இதற்கு அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 10, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

10—

சங்ககிரிக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* 10331—டாக்டர் வெ. சரோஜா :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரிக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமலாக்கப்பட்டும், குடிநீர்ப் பிரச்சினை உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், சங்ககிரி செயற்பொறியாளர் தயாரித்து அரசுக்கு அனுப்பியுள்ள குழாய்த் தொடரமைப்பை மாற்றி யமைக்கும் (Diversion Pipe Line) திட்டத்தை இவ்வாண்டில் செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சங்ககிரி பேரூராட்சியில் குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அறிந்து தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1992 செப்டம்பர் 21]

(ஆ) சங்ககிரி குடிநீர்த் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகையை சங்ககிரி பேரூராட்சி செலுத்தியவுடன் வேலை துவங்கி முடிக்கப்படும்.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சி செலுத்த வேண்டிய தொகையை செலுத்தியபின் விரைவில் தொடங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு? செலுத்திய உடன் எவ்வளவு விரைவில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன் வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 5 இலட்சம் ரூபாயை சங்ககிரி பேரூராட்சி செலுத்த வேண்டியிருக்கிறது. செலுத்தியவுடன் உடனடியாக வேலை துவங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 11, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

11—

வாழை, வெற்றிலைப் பயிர்களை பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தில் சேர்த்தல்.

*9374—திருமதி ப. சரஸ்வதி:
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வாழை, வெற்றிலைப் பயிர்களைப் பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தில் சேர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் : பேரவைத் தலைவர் அவர்களே,

---

(அ) மற்றும் (ஆ) வாழை, வெற்றிலைப் பயிர்களைப் பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தில் சேர்க்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை. எனினும் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம்மூலம் செயல்படும் வாழைப் பயிருக்கான ஈட்டுறுதித் திட்டத்தினை விவசாயிகளின் விருப்பத்தின் பேரில் கோவை, திருச்சி, வ.உ. சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் செயல்படுத்த சம்பந்தப்பட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பிரீமியத் தொகை முழுவதையும் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி பெற்றுக்கொண்டு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய முழு ஈட்டுத் தொகைக்குப் பொறுப்பேற்கிறது.